## தமிழ் - பத்தாம் வகுப்பு

மெல்ல மலரும் மாணவர்களுக்கான சிறப்பு கையேடு

செய்யுள் குறுவினாக்கள்

### *(இயல்-1) திருக்குறள், ஏலாதி*

1.உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

- ஒழுக்கம்
- சிறப்புகள் அனைத்தும் தரும்.

2. ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?

- மேன்மை
- பெரும்பழி

3.நன்றிக்கு வித்தாவது எது ?

- நல்லொழுக்கம்

4.என்றும் இடும்பை தருவது எது?

- தீய ஒழுக்கம்

5.பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார்?

- உயர்ந்தாருடன் பொருந்தி வாழாதவர்

6.கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?

- பகலில் கூகையை காக்கை வெல்லும்.அதுபோல காலமறிந்து செயல்பட வேண்டும்

www.Kanchikalvi.com

7.ஞாலம் கருதினும் கைகூடும். எப்போது?

- காலம் அறிந்து செயல்படும்போது.

8.ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர்?

- காலம் எதிர்பார்த்து காத்திருப்பர்.

9.ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?

- ஆட்டுக்கிடா பகையைத் தாக்க பின்வாங்குவது போன்றது.

10.செய்தற்கரிய செயல் செய்வது எப்போது?

- அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அப்போதே செயல்பட வேண்டும்.

11.கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?

- வாய்ப்பு வரும்போது கொக்குபோல விரைந்து செயல்பட வேண்டும்.

12.காலமறிந்து செயல்படுவது எவ்வாறு?

- ஏற்ற காலம் கிடைக்கும்போது தவறவிடாமல் செய்து முடித்தல் வேண்டும்.

13.திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

- முதற்பாவலர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யில்புலவர்

14.பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

- வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே
- இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே

15.ஏலாதி - நூல்குறிப்பு எழுதுக

- கணிமேதாவியார்
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்
- 81 -வெண்பாக்கள்

16.கணிமேதாவியார் - குறிப்பு எழுதுக.

- கணிமேதையர்
- 5-ஆம் நூற்றாண்டு
- நூல்கள்: ஏலாதி , திணைமாலை நூற்றைம்பது.

17.பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

- பிறருக்குப் பணிதல், சான்றோர் அறிவுரை கேட்டல், நூல் பல கற்றல், நூல் கூறும் வழியில் நடத்தல்.

### *(இயல்- 3) கம்பராமாயணம்*

18.கம்பர் - சிறு குறிப்பு எழுதுக.

- தேரழுந்தூர் , காலம்: 12- ஆம் நூற்றாண்டு
- ஆதரித்த வள்ளல்: சடையப்பர்
- நூல்கள்: ஏரெழுபது,சிலையெழுபது, சரஸ்வதி அந்தாதி,திருக்கை வழக்கம்

19.கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை?யாருக்கு கொண்டு சென்றான்?

- தேன்,மீன்
- இராமனுக்கு

www.Kanchikalvi.com

20.குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?

- தலை மண்ணில்பட விழுந்து வணங்கினான்.

21.குகனின் வேண்டுகோள் யாது?

- இராமனுடன் இருந்து தொண்டு செய்தல்.

22.அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்- யார் யாரிடம் கூறியது?

- இராமன் ,குகனிடம் கூறியது..

### *(அலகு -5) பெரியபுராணம்*

23.அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?

- களவு, பொய்,காமம்,சினம் நீங்கியவர்.

23. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயரிட்டார்?

- மக்கள்,பசுக்கள்,எருமைகள்,அளவைக்கருவிகள்

25. திருநாவுக்கரசு அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?

- வேறுபெயர் எழுதக் காரணம் என்ன?

26.வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?

- தலைமேல் கைவைத்து வணங்கினார்
- ஆசனம் கொடுத்தார்

27.மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?

- வாழை இலை அரியும்போது பாம்பு தீண்டி இறந்தான்.

28. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசை எவ்வாறு உயிர்த்தெழச் செய்தார்?

- "ஒன்றுகெலாம்" என பதிகம் பாடி உயிர்ப்பித்தார் .

29.நும்பேர் எழுதாது வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? - யார் யாரிடம் கூறியது?

- திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறியது.

30."இப்போது இங்கு அவன் உதவான்" - யார் யாரிடம் கூறியது?

- அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது.

## (அலகு -6) தமிழ்விடுதூது

31.வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?

- வெண்பா , ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

32.வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?

- அறம், பொருள், இன்பம், வீடு.

33.போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

- பிள்ளைப்பாண்டியன், ஒட்டக்கூத்தன், வில்லிபுத்தூரன்.

## (அலகு- 7) திருக்குறள், தேவாரம்

34.வன்மையுள் எல்லாந் தலையாயது எது?

- அறிவான பெரியாரை உறவாக ஏற்றல்.

35.யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது?

- அறிவான பெரியாரைச் சார்ந்து இருப்பவர்க்கு.

www.Kanchikalvi.com

36.கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?

- இடித்துத் திருத்தும் பெரியார் நட்பு இல்லாதவன்.

37.நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து?

- பலரைப் பகைப்பதைவிட பன்மடங்கு தீமை உடையது.

38.பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?

- பொருள்.

39.பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?

- செல்வம்.

40.வேந்தற்குரிய பொருள்கள் எவை?

- அரசுரிமைப்பொருள், மக்கள் வரி, திறைப்பொருள்.

41.தேவாரம் -பொருள் எழுதுக.

- தே+ஆரம் - இறைவனுக்கு சூட்டும் பாமாலை
- தே+வாரம் - இறை இசைப்பாடல் .

42.சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்?

- எவருக்கும் ஆட்படாதவன்
- வெண்சங்கினை காதில் அணிந்தவன்

## ( இயல்- 8) சீறாப்புராணம்

43.முகமதுநபியை வணங்கியவன் கூறிய செய்தி யாது?

- நாங்கள் நடக்கும் பாதையில் புலி ஒன்று துன்புறுத்துகிறது.

44.புலியின் தோற்றத்தினைப்பற்றி எழுதுக.

- நீண்ட வால், கண்களில் நெருப்பு, வெண்பற்கள், வாயில் புலால் நாற்றம்.

45.வனத்தில் வாழும் விலங்குகளாகச் சீறாப்புராணம் குறிப்பிடுவன யாவை?

- காட்டெருமை, பன்றி, கரடி, மான், சிங்கம்.

46.தம்முன் வந்த புலியை நபிகள் நாயகம் என்ன செய்தார்?

- விரல்களால் முகத்தையும் தலையையும் தடவினார்.

47.நபிகள் நாயகம் புலியிடம் கூறியது என்ன?

- உயிர்க்கொலை கூடாது.வேறு காட்டிற்குச் செல்.

48. நபிகள் நாயகத்திடம் புலி கூறியதென்ன?

- நல்லது நல்லது என்று வேறு காடு சென்றது.

49.புலி வசனித்த படலத்தின்மூலம் நீயறியும் அறம் யாது?

- கொடிய உயிரினமும் அருளாளர் முன் பணியும்.

## *(இயல்-9) கலித்தொகை, நந்திக்கலம்பகம், நாலாயிரத்திவ்யபிரபந்தம்*

50.ஆற்றுதல் என்பது யாது?

அலந்தவர்க்கு உதவுதல் (அல்லது) வருந்தி வந்தோர்க்கு உதவுதல்

51.பண்பு எனப்படுவது யாது?

சான்றோர் வழி நடத்தல் (அல்லது) பாடுஅறிந்து ஒழுகுதல்

52.அறிவு எனப்படுவது யாது?

அறிவற்றவர் சொல் பொறுத்தல்

53.கலம்பக நூல்களுள் முதல்நூல் எது?

நந்திக்கலம்பகம்

www.Kanchikalvi.com

54. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.

கார், காலம், வண்டு, தூது.

55. நந்திக்கலம்பகம் யார்மீது பாடப்பெற்றது?

மூன்றாம் நந்திவர்மன்

56. நந்திவர்மன் வீரம் எத்தகையது?

இந்திரன் வீரம் போன்றது.

57.ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்

58.குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?

வடமொழி, தென்மொழி

## *(இயல்-10) நிற்க நேரமில்லை*

1.எப்படி நடந்திடவேண்டுமென இளந்திரையன் கூறுகிறார்?

வாழ்க்கை வழி அடைபடுமுன் நேர்வழியில் செல்ல வேண்டும்.

2.நமது கை,கால்களின் பயன்களாக இளந்திரையன் எவற்றைக் கூறுகிறார்?

கால் - மலையைக் கடக்க கை - புதர்கள் அழிக்க

**ஆக்கம் : வ.கனேஷ் எம்.ஏ.,பி.எட்.,பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம். திருவாரூர் மாவட்டம்**